

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் அடையாள அட்டைகள் மற்றும் பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர் வா.சம்பத், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், சீர்மரபினர் நல வாரிய துணைத்தலைவர் திரு.இராசா அருண்மொழி அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திருமதி ஜெயமணி உட்பட பலர் உள்ளனர்.



பால்வளத்துறை அமைச்சர் த.மனோதங்கராஜ், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட். மற்றும் பால்வளத்துறை ஒருங்கிணைந்த ஆய்வுக் கூட்டத்தில், துறைசார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டு, ரூ.4.17 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச. காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் திருமதி இளமதி ஜோதி பிரகாஷ், உதவி ஆட்சியர்(பயிற்சி) மரு.ச.விநோதினி பார்த்திபன், துணை மேயர் ச.ராஜப்பா, திண்டுக்கல் மண்டல கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் சி.குருமூர்த்தி, திண்டுக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் திருமதி சுபாஷிணி, திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் பொது மேலாளர் மரு.க.வாணீஸ்வரி, துணைப்பதிவாளர்(பால் வளம்) அ.இரணியன் மற்றும் பலர் உள்ளனர்.

### மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்தல்!

# கழக எம்.பி.க்களாக நால்வர் தேர்வு!

### சட்டமன்றப் பேரவைச் செயலகம் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 12 -

சட்டமன்றப் பேரவைச் செயலகம் செய்தி வெளியீடு வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை வாக்காளர்களாகக் கொண்டு மாநிலங்களவைக்கு 6 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க ஜூன், 2025இல் நடைபெறும் தேர்தலுக்காக வரப்பெற்ற வேட்பு மனுக்கள் நேற்று முன்தினம் (10.06.2025) முற்பகல் 11.00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆய்வுக்குப் பின் கீழ்க்கண்ட 6 வேட்பாளர்கள் அளித்த வேட்பு மனுக்கள் செல்லத்தக்கவை என அறிவிக்கப் பெறுகிறது.

1. பி.வில்சன், தி.மு.க.
2. எஸ்.ஆர். சிவலிங்கம். தி.மு.க.
3. திருமதி ராஜாத்தி (கவிஞர் சல்மா) தி.மு.க.
4. கமல் ஹாசன், ம.நீ.ம.
5. ஐ.எஸ். இன்பதுரை, அ.தி.மு.க.
6. ம.தனபால், அ.தி.மு.க.
7. சுயேட்சை வேட்பாளர்களால் அளிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.


இவ்வாறு தேர்தல் நடத்தும் அதிகாரி அறிவித்துள்ளார்.

### முன்னாள் கோட்டக்குப்பம் நகரச் செயலாளர்,

# முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் கழக முன்னோடி எஸ்.சண்முகம் மறைவு!

*விழுப்புரம், ஜூன், 12 -*

*முன்னாள் கோட்டக்குப்பம் நகர செயலாளரும், முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவருமான கழக மூத்த முன்னோடி எஸ். சண்முகம் (வயது 93) அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு விசாலாட்சி பூரணி என்கிற மனைவியும், எஸ்.எஸ். ஜெயமூர்த்தி (கோட்டக்குப்பம் நகரச் செயலாளர்), எஸ்.எஸ். இளங்கோவன், எஸ்.எஸ்.தட்சணாமூர்த்தி, எஸ்.எஸ்.மதியழகன் ஆகிய மகன்களும், ஞானேஸ்வரி, சுமதி, சுந்தரி ஆகிய மூன்று மகள்களும் உள்ளனர் .*



*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தமிழ் மீது தீராத காதல் கொண்டு தனது இளமை காலம் முதலே கழகப் பணியாற்றியவர். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்றவர். அதன்பிறகு கழகத் தலைவரான தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அவர்கள் காட்டிய திசையில் முதுமையிலும் அயராத கழகப் பணியை ஆற்றியவர் அவர் மீது தீராத பற்றும் பாசமும் கொண்டவர்.*

*இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2020 ஆம் ஆண்டில் விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல் என்ற பயணத்தின் போது அவரை, நேரில் வந்து வீட்டிலியே சந்தித்து நலம் விசாரித்து ஆறுதல் கூறினார். என்பது குறிப்பிடத்தக்கது.*

*கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களுடன் இணைந்து கழகப் பணியாற்றியவர் அவர் மீதும் தீராத பற்று கொண்டு அசராத கழகப் பணியாற்றியவர். அப்படிப்பட்ட கழக மூத்த முன்னோடி இன்று நம்மிடையே இல்லை, அவருடைய இழப்பு கழகத்தினருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் பேரிழப்பாகும். அவருடைய இறுதி ஊர்வலம் நேற்று (11.06.2025) மாலை 4.00 மணியளவில் கோட்டக்குப்பம் நகரத்தில் உள்ள கோட்டைமேடு பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.*



முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் எஸ்.எஸ். ஜெயமூர்த்தி, எஸ்.எஸ். இளங்கோவன், எஸ்.எஸ். தஷ்ணாமூர்த்தி, எஸ்.எஸ்.மதியழகன் ஆகியோரின் தந்தையுமான கழக மூத்த முன்னோடி எஸ்.சண்முகம் மறைவெய்தினார். தகவல் அறிந்த கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அன்னாரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். கழக நிர்வாகிகளும் அன்னாரது உடல் மீது மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

### விருதுநகர் மாவட்டம் – வடகரை கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலை

# வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**விருதுநகர், ஜூன் 12-**

**விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், வடகரை கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

அவரது அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், வடகரை கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று (11.6.2025) காலை சுமார் 9.00 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் காரியாட்டி வட்டம், கல்குறிச்சியைச் சேர்ந்த திருமதி.சவுண்டம்மாள் (வயது 54) க/பெ.ரவி மற்றும் தண்டியனேந்தலைச் சேர்ந்த கருப்பையா (வயது 37) த/பெ.அய்யணன் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழுந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் காரியாபட்டியைச் சேர்ந்த கணேசன் (வயது 55), முருகன் (வயது 40), திருமதி.மாரியம்மாள் (வயது 40) மற்றும் திருமதி. பேச்சியம்மாள் (வயது 38) ஆகிய நான்கு நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### கள்ளக்குறிச்சி மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலக

# கட்டுமானப் பணிகள் 60 சதவிகிதம் நிறைவடைந்துள்ளது!

### அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

கள்ளக்குறிச்சி, ஜுன். 12–

கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் அருகே வீரசோழபுரத்தில் பொதுப்பணித்துறையின் சார்பில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடக் கட்டுமானப் பணிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில் 08.06.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



இந்த ஆய்வின்போது ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற தே.மலையரசன் ஆகியோர் உடனிருந்தனர்.

இதன் பின்னர் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, கள்ளக்குறிச்சி வட்டம், வீரசோழபுரத்தில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம் 8 தளங்களைக் கொண்டு ரூ.139.41 கோடி மதிப்பீட்டில் சுமார் 35.18 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்டமாக கட்டப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த புதிய மாவட்ட ஆட்சியரக கட்டட கட்டுமானப் பணிகள் இன்றைய தினம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வில் கட்டுமானப் பணிகளின் தரம், கட்டுமானப் பொருட்களின் தரம், திட்ட விதிமுறைகளின்படி பணிகள் நடைபெறுதல் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் கேட்டறிந்து பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த புதிய மாவட்ட ஆட்சியரகக் கட்டடம் பல்துறை பெருந்திட்ட வளாகமாக அமையப்பெற உள்ளது. புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 8 தளங்களைக் கொண்டு கட்டப்பட்டு வருகிறது. இந்த அலுவலகம் அனைத்துத் துறை அலுவலகங்களை உள்ளடக்கி கட்டப்பட்டு வருவதுடன் வங்கி, தபால் அலுவலகம், ஏ.டி.எம். வசதி, பூங்கா உள்ளிட்ட பல்வேறு பல்வேறு வசதிகளுடன் அமையப்பெற உள்ளது. இதே போன்று இன்றைய ஆய்வில் 2 வளைவுகள் அமைத்தல் மற்றும் பூங்கா பணிகளுக்கான இடம் தேர்வு இறுதி செய்யப்பட்டு அதற்கான பணிகளும் உடனடியாக தொடங்க உள்ளது.

புதிய மாவட்ட ஆட்சியரகக் கட்டடக் கட்டுமானப் பணிகள் இதுவரை சுமார் 60 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது. மேலும் கட்டுமானப் பணிகள் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், கட்டுமானங்களின் தரம் குறித்து உரிய ஆய்வு செய்யப்பட்டு கட்டுமான தரம் உறுதிசெய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டு வரும் துரித முயற்சியின் பயனாக தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு முக்கிய திட்டப் பணிகள் அனைத்தும் ஒப்பந்த காலத்திற்கு முன்பாகவே தரமாகவும், விரைவாகவும் முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அந்த வகையில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரகக் புதிய கட்டட கட்டுமானப் பணிகள் செப்டம்பர் மாதத்தில் முழுமையாக முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதன் மூலம் பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களின் கோரிக்கையினை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செப்டம்பர் மாதத்தில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரக புதிய கட்டடம் திறந்து வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப முன்னுரிமையளித்து பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது என பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஜீவா, பொதுப்பணித்துறை கண்காணிப்புப் பொறியாளர் பரிதி, முதன்மை பொறியாளர் மணிகண்டன், செயற்பொறியாளர் செல்வகுமார் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள், பொதுப்பணித்துறை உயர் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



தென்காசி வடக்கு மாவட்டம், குருவிகுளம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு குருவிகுளம் கிழக்கு ஒன்றியச் செயலாளர், நக்கலமுத்தன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் குணசேகரன் ஏற்பாட்டில் சித்திரம்பட்டி செல்வ காளியம்மன் கோயிலில் நடைபெற்ற அன்னதானம் நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்று உணவு வழங்கினார். நிகழ்வில் ஒன்றிய துணைச் செயலாளர் தினேஷ் மாவட்டப் பிரதிநிதிகள் முத்தையா, ஆனந்தராஜ் அய்யாசாமி, கிளைக் கழகச் செயலாளர்கள் வேலு,கணேசன், மாரிமுத்து (ஏ) கண்ணன், ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் புளிவை கோபிநாத்,கார்த்திக், தம்பி ரஞ்சித் உள்பட கழக உடன் பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துரை சாம்பசிவம்

### ஜூன் 12 (2016)



**வேலூர் மாவட்டத்தில், கழகத்தின் தொடக்கக் காலத்திலேயே ஆசிரியர் பணியை உதறிவிட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**1957–ல் பேரறிஞர் அண்ணாவால் அடையாளம் காணப்பட்டு குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டவர்.**

**கே.வி.குப்பம் ஒன்றியச் செயலாளராக தொடர்ந்து 15 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.**

**வேலூர் மாவட்ட ஊராட்சித் தலைவராகவும் – கீ.வ.குப்பம் ஒன்றிய பெருந்தலைவராகவுமம் – முருக்கம்பட்டு ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா கைதியாகவும், அதற்கு முன்னர்1962–ல் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் கைதாகி, அறிஞர் அண்ணாவுடன் வேலூர் சிறையில் இருந்தபோது, அண்ணாவால் "தாடிக்காரர்'என அழைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**